**கவனிக்க** .- *15.11.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* IV *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1838 - 2013 නොවැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2013.11.22

*1838 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | – |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 196 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## ரஞ்ஜித் சியம்பலாபிடிய சிநேகபூர்வ மன்றத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

பாராளுமன்ற உறுப்பினர், ஷெஹான் ஷேமசிங்ஹ ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''ரஞ்ஜித் சியம்பலாபிடிய சிநேகபூர்வ மன்றம்'' ஐ கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த "மித்ரத்வ பதனம" மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) இலங்கையில் சிறுவர்கள், மற்றும் மாதர் அபிவிருத்தி, சமூக பொருளாதாரம் என்பவைகளை கலாசார பண்பாட்டினூடாக அபிவிருத்தி செய்தல் ;

(2) இலங்கையின் மூத்த பரம்பரையினரின் எல்லாவித அபிவிருத்திகளுக்குமாக நடவடிக்கைகள் எடுத்தல் ;

(3) உயர் கல்வி நிறுவனங்களை வலுவூட்டல், உயர்கல்வியை மேலும் அபிவிருத்தியடையச் செய்வதற்கு, ஆய்வுத் துறைக்கும் புலமைப் பரிசில் துறைக்கும் வலுவூட்டல் ;

பிறவும்.

ஷெஹான் ஷேமசிங்ஹ,
பாராளுமன்ற உறுப்பினர்,
அநுராதபுரம் மாவட்டம்.

11-674

---

## ஸ்ரீ லங்கா அமத்யப மகா சபாவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

பாராளுமன்ற உறுப்பினர், ஜனக பண்டார ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "ஸ்ரீ லங்கா அமத்யப மகா சபாவை" ஐ கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த ஸ்ரீ லங்கா அமத்யப மகா சபாவைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) இலங்கையை போதையில் இருந்து விடுபட்ட நாடாக மாற்றுதல் ;

(2) தொன்றுதொட்டு வருகின்ற விழுமியங்களை தொடர்ச்சியாகப் பேணிவருவதையும் மேம்படுத்துவதையும் ஊக்குவித்தல் ;

(3) இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் எவ்விதமான வித்தியாசமுமின்றி போதைத் தொல்லையிலிருந்து காப்பாற்றிக் கொள்ளல் ;

பிறவும்.

ஜனக பண்டார,
பாராளுமன்ற உறுப்பினர்,
களுத்துறை மாவட்டம்.

11-726

---

## எம். எஸ். தௌபீக் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

பாராளுமன்ற உறுப்பினர், ஏ. எச். எம். அஸ்வர் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''எம். எஸ். தௌபீக் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தினைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) நாட்டின் அபிவிருத்தியில் பங்கேற்றல் ;

(2) இனங்களுக்கிடையில் சமாதானத்தினை வளர்த்தல் ;

(3) சமயம் சார்பான நிலையங்களின் அபிவிருத்தியில் பங்கேற்றல் ;

பிறவும்.

ஏ. எச். எம். அஸ்வர்,
பாராளுமன்ற உறுப்பினர்.

11-730

---

## தர்மதீப நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

பாராளுமன்ற உறுப்பினர் அச்சல ஜாகொடகே, ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "தர்மதீப நிறுவனத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த தர்மதீப நிறுவனத்தை கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) உயர்ந்த ஒழுக்கமான அதிகமான ஆன்மீகமான கல்வி, சமூக, பொருளாதார பின்னணியுடைய நேர்த்திறனான சமூகத்தை தோற்றுவிப்பதற்கான சமய விழுமியங்களையும் உளச்சார்பு களையும் பண்பாட்டையும் கொண்ட தீவாக இலங்கையை எதிர்காலத்தில் வடிவமைப்பதும் வழிகாட்டலும் ;

(2) இலங்கையின் புத்த சமயத்தின் பாதுகாப்பையும் நலங்களையும் காப்பதற்காக, இதன் சார்பாக ஒரு அரச ஆலோசனை சேவையை ஏற்படுத்தலும் ;

(3) கல்வி விழுமியங்களையும், பொருளாதார தரங்களின் மேம்பாட்டையும், அபிவிருத்தியையும் அதிகரிப்பதற்கும், எல்லைப்பாட்டு சமூகத்தின் சிறார்களுக்கு ஒரு ஆதார சேவையையும் நிறுவுவதற்காக புலமைப்பரிசில்களை ஒழுங்கமைப்பதும், வேறு நன்மையான செயற்றிட்டங்களை தேவையான மக்களுக்கு ஏற்படுத்துவதும் ;

பிறவும்.

அச்சல ஜாகொடகே,
பாராளுமன்ற உறுப்பினர்.

11-733